THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Government undertake to put these meters, because if it is entrusted to the Corporation, the meters themselves might disappear.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Chairman, Sir, the suggestion of the hon. Member will also be carefully looked into by the Government.

THIRU K. S. ABDUL WAHAB: Mr. Chairman, Sir, I want to know the explanation for the meter system.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கார்களை முக்கியமான இடங்களிலே அவர்கள் நிறுத்திவிட்டுப் போய்விடுவார்களே யானால், குறிப்பிட்ட அளவு காலதாமதமான பிறகு, தானாக இந்த மீட்டர் இவ்வளவு கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்று ஓடிக்கொண்டே இருக்கும். அதிக நேரம் கார்களை நிறுத்தி வைப்பார்களானால், அதிக ரூபாய் போட்டுக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நேரமானவுடனே மணி அடிக்கும். காரை எடுக்கவில்லை என்றால், போலீஸ்காரர் வந்து 10 ரூபாய் ஃபைன் போட்டு விடுவார். You need not go to the Court; there will be the Police to punish you.

Taxis

* 109 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether taxis from this State are permitted to ply in other States in the South under a single point tax; and

(b) if so, the details thereof?

வாடகைக் கார்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநில வாடகைக் கார்கள் ஒருமுனை வரியின் கீழ் ஏனைய தென் மாநிலங்களில் விடுவதற்கு, அனுமதிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தமிழ் மாநிலத்திலிருந்து தென்னிந்திய மாநிலங்களில் ஓடும் சாதாரண டாக்ஸிகளின் எண்ணிக்கையின் விவரம் பின் வருமாறு :—

மாநிலத்தின் பெயர்.	இதுவரை வழங்கப்பட்ட டாக்ஸிகளின் எண்ணிக்கை.
ஆந்திரப்பிரதேசம்	133
கேரளா	228
மைசூர்	..

Refresher Training for Government Car Drivers

* 110. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to give a refresher training to the Government car drivers to prevent the occurrence of a large number of accidents caused by the car drivers; and

(b) if so, the details thereof?

அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சி

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கார் ஓட்டுநர்களால் அதிக விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சிகள் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கார் ஓட்டுநர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே பல கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அந்த அலுவலகங்களிலே லஞ்சம் காரணமாக, சரியாகக் கார் ஓட்டத் தெரியாதவர்கள் லைசென்சுகள் வாங்கிவிடுகிறார்கள். அதன் காரண மாக விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. ஆகவே அந்த முறையைச் சரியாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.